அந்தரங்கமானது

OLD

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்


## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 46 - இந்துநாகரிகம்

### பழைய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்

Department of Examinations



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 46 - இந்து நாகரிகம்

## பழைய பாடத்திட்டம்

## புள்ளி வழங்கும் திட்டம்

### பத்திரம் II

### பகுதி I

ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் உரித்தாகும்.

| | | |
|---|---|---|
| வினா 01 | - 5+7 + 8 | = 20 புள்ளிகள் |
| வினா 02 | - 6+ 7+ 7 | = 20 புள்ளிகள் |
| வினா 03 | - 6+ 6+ 8 | = 20 புள்ளிகள் |

எவையேனும் 02 வினாக்கள் 2 x 20 = 40 புள்ளிகள்

### பகுதி II

| | | |
|---|---|---|
| வினா 04 | - 5+ 5+ 5+ 5 | = 20 புள்ளிகள் |
| வினா 05 | - 6 + 7 + 7 | = 20 புள்ளிகள் |
| வினா 06 | - 6 + 7 + 7 | = 20 புள்ளிகள் |
| வினா 07 | - | = 20 புள்ளிகள் |
| வினா 08 | எவையேனும் நான்கு விடயங்களுக்கு ஒன்றுக்கு 05 வீதம் 4 x 5 | = 20 புள்ளிகள் |

எவையேனும் 03 வினாக்களுக்கு 3x 20 = 60 புள்ளிகள்

பகுதி I - 40 புள்ளிகள்
பகுதி II - 60 புள்ளிகள்

மொத்தம் - 100 புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

| | | | |
|---|---|---|---|
| வினாப்பத்திரம் | I | 1 X 50 | 50 புள்ளிகள் |
| வினாப் பத்திரம் | II | 5 X 20 | 100 புள்ளிகள் |

Department of Examinations

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

Department of Examinations

**1.** இந்து நாகரிகத்தின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களில் ஒன்றாகிய கல்வெட்டுக்களில் உள்ள 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்ற பதத்தின் பொருள்
(1) நீண்ட ஆயுள் ஏற்படுவதாகுக. (2) மங்கலமுண்டாவதாகுக.
(3) செல்வம் பெருகுவதாகுக. (4) வெற்றி கிட்டுவதாகுக.
(5) உண்மையே பேசுக.

**2.** வேதங்கள் 'அபௌருஷேயம்' எனச் சுட்டப்படுவதன் காரணம்
(1) அநாதி என்பதால் (2) மனிதரால் இயற்றப்படாதது என்பதால்
(3) காதால் கேட்கப்பட்டது என்பதால் (4) புலனுணர்வால் அறியப்பட்டது என்பதால்
(5) ரிஷிகளால் இயற்றப்பட்டது என்பதால்

**3.** யாகக்கிரியைகளில் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்த வேதம்
(1) அதர்வ வேதம் (2) இருக்கு வேதம் (3) சாம வேதம்
(4) ஆயுர் வேதம் (5) யசுர் வேதம்

**4.** இந்து தத்துவ உண்மைகளை உபநிடதங்கள் வெளிப்படுத்தும் முறைகளை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) உரையாடல், செய்முறை, பஜனை
(2) விசாரம், உரையாடல், போதனை
(3) செய்முறை, பாவனை, தியானம்
(4) விரிவுரை, பாவனை, விவாதம்
(5) விவாதம், உரையாடல், செய்முறை

**5.** பேச்சின் (வாக்கின்) வரலாறு இடம்பெற்றுள்ள நூல்
(1) வேதாங்கம் (2) சுக்கிரநீதி (3) அதர்வ வேதம்
(4) சதபத பிராமணம் (5) கேன உபநிடதம்

**6.** ஆன்மாவைப் பற்றிய இந்திரன் பிரஜாபதி உரையாடல் இடம்பெறும் உபநிடதம்
(1) முண்டக உபநிடதம் (2) தைத்திரீய உபநிடதம் (3) கேன உபநிடதம்
(4) பிருகதாரண்யக உபநிடதம் (5) சாந்தோக்கிய உபநிடதம்

**7.** இதிகாச புராணங்களின் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கு வகித்த மூல நூல்
(1) உபநிடதங்கள் (2) வேதங்கள் (3) சுக்கிர நீதி
(4) ஆரணியகம் (5) தர்மசாத்திரங்கள்

**8.** மௌரிய அரச வம்சத்தினை மீட்டுருவாக்கம் செய்த மன்னன்
(1) சந்திர குப்தன் (2) உருத்திர தாமன் (3) கனிஷ்கன்
(4) முதலாம் வாசுதேவன் (5) சமுத்திர குப்தன்

**9.** வட இந்தியாவில் காந்தாரக்கலை முதன்மை பெற்ற காலம்
(1) குப்தர் காலம் (2) மௌரியர் காலம் (3) நந்தவம்ச ஆட்சிக்காலம்
(4) குஷானர் காலம் (5) சிந்துவெளி நாகரிக காலம்

**10.** திருமாலின் ஐந்து நிலைகளில் மூன்றினைக் கொண்ட தொகுதி யாது?
(1) தத்துவம், பேறு, தகுதி
(2) பரத்துவம், வியூகம், அர்ச்சை
(3) அவதாரம், ஆவேசம், அம்சம்
(4) விபவம், உபாயம், தடை
(5) பயன், பேறு, தத்துவம்

**11.** 'விசித்திர சித்தன்' என்ற விருதுப் பெயருக்குரிய பல்லவ மன்னன்
(1) சிம்ம விஷ்ணு (2) முதலாம் சிம்மவர்மன் (3) மகேந்திரவர்மன்
(4) குமாரவிஷ்ணு (5) நந்திவர்மன்

**12.** ஆகமம் கூறும் கிரியைகளை ஒழுங்காக நிறைவேற்ற வழிகாட்டும் நூல்கள்
(1) தோத்திர மாலை (2) தந்திரங்கள் (3) திருமுறைகள்
(4) பிரமசூத்திரம் (5) பத்ததிகள்

**13.** "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே" என ஐந்தெழுத்து மந்திரத்தைப் போற்றிப் பாடியவர்
(1) மாணிக்கவாசகர் (2) சுந்தரர் (3) காரைக்காலம்மையார்
(4) சம்பந்தர் (5) அப்பர்

**14.** இந்து தத்துவ தரிசனங்கள் மனித குலத்திற்கு உணர்த்தும் உன்னத போதனை
(1) கிரியை (2) கல்வி (3) தியானம்
(4) யோகம் (5) ஆன்ம விடுதலைக்குரிய வழிகள்

**15.** கணபதிக்குரிய காரணப்பெயர்களுள் 'விநாயகர்' என்ற பெயர் குறித்து நிற்பது
(1) பிள்ளைகளுக்குரிய கடவுள் (2) தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர்
(3) பெரிய வயிற்றை உடையவர் (4) யாவற்றையும் தந்தருள்பவர்
(5) தும்பிக்கையை உடையவர்

**16.** பின்வருவனவற்றுள் இலங்கையில் பாடல்பெற்ற சிவாலயங்கள் எனப் போற்றப்படுபவை
(1) நகுலேஸ்வரம், வண்ணை வைத்தீசுவரன் கோவில்
(2) பொன்னம்பலவாணேச்சரம், சந்திரசேகரீச்சரம்
(3) திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம்
(4) வானவன்மாதேவீச்சரம், கீரிமலை நகுலேச்சரம்
(5) முன்னேச்சரம், காரைநகர் சிவன் கோவில்

**17.** யோக நெறியில் நின்று இறைவனைப் போற்றிய அருளாளர்
(1) அப்பர் (2) சுந்தரர் (3) மாணிக்கவாசகர்
(4) சம்பந்தர் (5) காரைக்காலம்மையார்

**18.** அத்வைத தத்துவ மரபில் ' கேவலம் ' என்ற சொல் குறித்து நிற்கும் பொருளாவது
(1) அன்மை (2) இன்மை (3) தனிமை
(4) மறுதலை (5) சிறுமை

**19.** சைவசித்தாந்திகள் குறிப்பிடும் ஆணவத்திற்குரியதான எண்வகைக் குணங்களில் 'எப்பொழுதும் துக்கப்படுதல்' என்பதைச் சுட்டும் குணமாவது
(1) கற்பம் (2) அஞர் (3) விகற்பம்
(4) குரோதம் (5) விசித்திரம்

**20.** அரசின் தோற்றம் பற்றிய கோட்பாட்டில் மன்னன் மக்களின் ஏகோபித்த சம்மதத்துடன் தெரிவு செய்யப்படுவதைக் குறிப்பதற்குச் சுட்டப்படும் பெயர்
(1) ஸ்வாமி (2) ஏக்ராட் (3) சர்வபௌமன்
(4) பரீட்சித் (5) மஹாசம்மதன்

Department of Examinations

**21.** சைவ மாணவர்கள் கற்பதற்காக அருணாசலதேசிகர் எழுதிய பன்னிரு சமய நூல்கள் அடங்கிய திரட்டைக் குறிப்பது
(1) அருட்பாத் திரட்டு (2) சைவசமய சிந்தாமணி (3) சைவ இலக்கிய கதாமஞ்சரி
(4) சைவசமயக் களஞ்சியம் (5) ஞானபோத விளக்கச் சூறாவளி

**22.** அரசன் குடிமக்களிடமிருந்து வரி வசூலிக்கும் செயன்முறையைப் "பூமரத்தை வளர்த்து மலர் பறித்து மலர் தொடுக்கும்" செயன்முறையுடன் தொடர்புபடுத்தி விளக்கிய நூல்
(1) மனுஸ்மிருதி (2) சுக்கிர நீதி (3) காமாண்டக நீதிசாரம்
(4) திருக்குறள் (5) யசுர் வேதம்

**23.** பிரமசூத்திரத்தின் அவிரோத அத்தியாயம் குறிக்கும் விடயமாவது,
(1) பிரமத்தை அடையும் உபாயங்களைக் கூறுகின்றது.
(2) பிரமஞானத்தின் பயனை எடுத்தியம்புகின்றது.
(3) வேதாந்தக் கருத்துக்களுடன் முரண்படும் பிற தத்துவக் கோட்பாடுகளைக் கண்டிக்கிறது.
(4) பிரமஞானியின் பண்புகளை விபரிக்கின்றது.
(5) மாயாவாதத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கிறது.

**24.** வீரசைவ நெறியுடன் தொடர்புடையோர்
(1) பாகவதர் (2) காபாலிகர் (3) ஆகமாந்தர்
(4) புராதனர் (5) தாந்திரீகர்கள்

**25.** "சத்தியமே வெற்றி பெறும்" என்ற பொருள்பட அமைந்த சுலோகம் இடம்பெறும் உபநிடதம்
(1) முண்டக உபநிடதம் (2) கடோபநிடதம் (3) சாந்தோக்கிய உபநிடதம்
(4) கேன உபநிடதம் (5) தைத்திரீய உபநிடதம்

**26.** இந்து சமயம் வலியுறுத்தும் நான்கு நன்னெறிகளாகிய அன்புறு நேயம், கருணை, இரக்க நல்லின்பம், நிதானம் ஆகியவற்றுக்கு பௌத்தம் வழங்கும் பெயர்
(1) பிரம விஹாரா (2) மாவிரதங்கள் (3) சமிதிகள்
(4) குசலங்கள் (5) பாவனா

**27.** சிவாகமக் கிரியை மரபில் 'அநாவர்த்தனம்' என்பது
(1) ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து மூலமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது
(2) பழைய ஆலயத்திற்குப் பிராயச்சித்தம் செய்தல்
(3) பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை ஆலயத்திற்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நிகழ்த்துதல்
(4) ஏதாவது தவறு நேருமிடத்து உடன் நிகழ்த்தும் குடமுழுக்கு
(5) பல்வேறு இயற்கைக் காரணங்களால் பன்னெடுங்காலம் நித்திய நைமித்திகங்கள் நிகழாது இருந்த ஆலயத்தைப் புதுப்பித்து நிகழ்த்தும் குடமுழுக்கு

**28.** "இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது" என்று கூறிய ஆய்வாளர்
(1) மாக்ஸ்மூல்லர் (2) மக்டொனால் (3) சேர் ஜோன் மார்ஷல்
(4) வீலர் (5) ஜகோபி

**29.** பிரமமே பிரபஞ்சமாகத் தோன்றுகின்றது என்பதை விளக்குவதற்கு சங்கரர் முன்வைக்கும் வாதம்
(1) விவர்த்த வாதம் (2) அவச்சேத வாதம் (3) சூனிய வாதம்
(4) கணபங்க வாதம் (5) சத்காரிய வாதம்

**30.** பகவத்கீதையில் 'செயலிற் துறவுக் கொள்கை' என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) தியான யோகம் (2) பக்தி யோகம் (3) கர்ம யோகம்
(4) ஞான யோகம் (5) இராஜ யோகம்

**31.** "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" எனத் தமது நூலில் சிறப்பித்துக் கூறியவர்
(1) மெய்கண்டார் (2) அருணந்தி சிவாச்சாரியார் (3) உமாபதி சிவாச்சாரியார்
(4) மறைஞான சம்பந்தர் (5) திருக்கடவூர் உய்யவந்த தேவர்

**32.** தமிழகத்தில் சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்ற காலம் எது?
(1) பல்லவர் காலம் (2) சோழர் காலம் (3) விஜயநகர நாயக்கர் காலம்
(4) பாண்டியர் காலம் (5) ஐரோப்பியர் காலம்

Department of Examinations

**33.** மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட 'சுத்தி' எனும் இயக்கத்தை செயற்படச் செய்த நிறுவனம்
(1) பிரம்ம சமாஜம் (2) ஆரிய சமாஜம் (3) இராமகிருஷ்ண இயக்கம்
(4) பிரம்மஞான சபை (5) விவேகானந்த சபை

**34.** இந்துத் திருக்கோயில் மரபில் 'ஸ்தபதி' என்பவன் ஆற்றும் பணியாவது
(1) ஆலயங்களில் திருமுறை ஓதுதல்
(2) கோயிலில் அறங்காவற் பணி செய்தல்
(3) ஆலயக் கிரியைகளை முன்னின்று நடாத்துதல்
(4) கோயிற் கட்டடங்களைச் சாஸ்திரப்படி நிர்மாணித்தல்
(5) கோயிற் திருப்பணிக்கு நிதியுதவி சேகரித்தல்

**35.** வேதகால சமய மரபில் மாந்திரீகக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது
(1) இருக்கு வேதம் (2) தனுர் வேதம் (3) சாம வேதம்
(4) யசுர் வேதம் (5) அதர்வ வேதம்

● மேல்வரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| சங்கரர் | ஆலமர் செல்வன் | வருணன் | இராஜதர்மம் | பிரமாண தீபிகை |
| F | G | H | I | J |
| விஷ்ணு | சிவயோக சாரம் | சேயோன் | வர்ணக் கோட்பாடு | நிம்பார்க்கர் |

**36.** பிரமசூத்திரத்திற்கு உரையெழுதியோருடன் தொடர்புடைய சோடி
(1) A, J (2) A, H (3) B, J (4) C, F (5) D, I

**37.** சங்ககாலச் சமய நெறியோடு தொடர்புடைய சோடி
(1) A, C (2) B, H (3) C, H (4) E, F (5) F, H

**38.** திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரது ஆக்கங்களைக் குறிக்கும் சோடி
(1) B, F (2) C, G (3) D, I (4) E, G (5) H, J

**39.** இருக்கு வேதம் போற்றும் விண்ணைச் சார்ந்த தெய்வங்களைக் குறிக்கும் சோடி
(1) B, H (2) B, F (3) C, F (4) C, H (5) F, I

**40.** தர்மசாத்திரங்கள் கூறும் விடயங்களோடு தொடர்புடைய சோடி
(1) A, D (2) B, I (3) C, F (4) D, I (5) H, J

Department of Examinations

● **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**41. இந்து சமயத்தில் முருகவழிபாடு**

(1) இந்து சமய மரபில் முருக வழிபாடு மிகுந்த பக்தி உணர்வுடன் மக்களிடையே சிறப்புற்று வருகின்றது.
(2) முருகனுக்கென உலகளாவிய நிலையில் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.
(3) தமிழகத்தில் அறுபடை வீடுகள் பற்றி நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் புகழ்ந்து பாடியுள்ளார்.
(4) யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முருக வழிபாட்டின் சிறப்புக்குச் சான்றாகும்.
(5) முருக வழிபாடு பற்றி அறிவதற்கு பிராமணங்கள் பெரிதும் உதவுகின்றன.

**42. இந்து சமூகத்தை மறுமலர்ச்சியடையச் செய்த ஞானி ராஜாராம் மோகன்ராய்**

(1) இவர் கி.பி. 1772ஆம் ஆண்டில் வங்காள நாட்டில் பிறந்தவர்.
(2) பலமதக் கோட்பாடுகளையும் பல மொழிகளையும் அறிந்த ஞானி.
(3) சமூகக் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்கி இந்து சமூகத்தை மறுமலர்ச்சியடையச் செய்தவர்.
(4) இவர் 1828ஆம் ஆண்டு ஆரிய சமாஜத்தை தாபித்தார்.
(5) பெண்ணுரிமையைப் பாதுகாத்து இந்து தர்மத்தை உலகளாவிய நிலையில் பரப்பிய பெருமைக்குரியவர்.

**43. எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய நீதிநூல் திருக்குறள்**

(1) திருக்குறளில் சமயக் கருத்துக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.
(2) திருக்குறளுக்கு பொய்யாமொழி, தமிழ்மறை, உலகப் பொதுமறை, தெய்வநூல் போன்ற சிறப்புப் பெயர்கள் உள்ளன.
(3) திருக்குறள் யாவராலும் போற்றப்படுமளவிற்குச் சிந்தனை வளங்கொண்டது.
(4) திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
(5) திருக்குறளில் வள்ளுவர், ஒழுக்கத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

**44. தாயுமான சுவாமிகளும் சமரச சன்மார்க்கமும்**

(1) இந்து சமய ஞானியர்களுள் விஜயநகர மன்னராட்சிக் காலத்தைச் சேர்ந்த தாயுமான சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர்.
(2) இவர் சாத்திர தோத்திர நூல்களிலும், வடமொழியிலும் தமிழ்மொழியிலும் மிகுந்த புலமைமிக்கவர்.
(3) இவர் மௌன குருசாமி என்ற ஞானியை நாடி அருளுபதேசம் பெற்றவர்.
(4) இவர் திருமண பந்தத்தில் தொடர்ச்சியாக ஈடுபாடு கொண்டவர்.
(5) இவர் சமரச சன்மார்க்க நெறி நின்றவர்.

**45. சைவசித்தாந்த சிந்தனை வளர்ச்சியில் சிவஞானபோதம்**

(1) பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுள் நடுநாயகமாக விளங்குவது சிவஞானபோத நூலாகும்.
(2) சிவனின் திருவருளால் வரும் மெய்யறிவைத் தரும் நூல் என்ற பொருளையுடையது இந்நூலாகும்.
(3) மூல நூல்களில் உள்ள சித்தாந்த உண்மைகளை அறிவாராய்ச்சிக்கு ஒத்தவாறு மிக நுட்பமாகக் கூறுகின்றது.
(4) இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவராவார்.
(5) இச்சாத்திர நூல் பதினெட்டுச் சூத்திரங்களைக் கொண்டது.

Department of Examinations

● **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றைப் பின்வரும் அட்டவணையின் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A காஞ்சி மாநகரில் பிறப்பு | F நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் | K பசு விலைமதிப்பற்ற செல்வம் | P சமூக வாழ்க்கை ஒப்பந்தம் |
| B உழவுத் தொழில் | G வீர சைவமரபினர் | L நண்பர் போல் அறிவுரை கூறுவது | Q மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர் |
| C தெய்வ வரலாறுகளைக் கூறுவது | H அரச அதிகாரிகளின் கடமைகள் | M துறவு வாழ்க்கை | R அட்டாங்க வழிபாடு |
| D அரச நிறுவனத்தின் தோற்றம் | I வருணக் கட்டமைப்பின் தொடக்கம் | N அரசன் குடிமக்களின் நன்மை கருதி செயற்படல் | S விரதம், தவம், தீர்த்தம் பற்றிக் கூறுவது |
| E தோப்புக்கரணம் போடுதல் | J இந்து சமய நெறிகள் பற்றிய விடயங்கள் | O சூரிய நமஸ்காரம் | T பல நூல்களை இயற்றிய புலமையாளர் |

**46.** இருக்குவேத கால சமூக பொருளாதார வாழ்வியலோடு தொடர்புடைய தொகுதி

(1) A, H, L, P (2) B, I, K, Q (3) C, I, L, R (4) E, H, O, P (5) D, H, N, S

**47.** துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளோடு தொடர்புடைய தொகுதி

(1) A, G, M, T (2) B, H, M, R (3) C, G, O, S (4) D, I, M, R (5) E, J, N, Q

**48.** புராணங்கள் கூறும் விடயங்களோடு தொடர்புடைய தொகுதி

(1) A, J, O, R (2) B, H, M, T (3) C, J, L, S (4) D, H, O, S (5) E, H, L, R

**49.** கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் கூறும் அரசியலோடு தொடர்புடைய தொகுதி

(1) A, J, O, R (2) B, F, M, T (3) C, H, K, Q (4) D, H, N, P (5) E, H, M, R

**50.** இந்து வழிபாட்டு முறைகளில் காணப்படும் மருத்துவ சிந்தனைகளோடு தொடர்புடைய தொகுதி

(1) A, I, O, S (2) C, F, M, P (3) D, F, N, R (4) E, F, O, R (5) B, F, M, S

* * *

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

### පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம் **46** විෂයය / பாடம் **இந்து நாகரிகம்**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

Department of Examinations

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 4 | 31. | 3 | 41. | 5 |
| 02. | 2 | 12. | 5 | 22. | 2 | 32. | 3 | 42. | 4 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 3 | 33. | 2 | 43. | 1 |
| 04. | 5 | 14. | 5 | 24. | 4 | 34. | 4 | 44. | 4 |
| 05. | 4 | 15. | 2 | 25. | 1 | 35. | 5 | 45. | 5 |
| 06. | 5 | 16. | 3 | 26. | 1 | 36. | 1 | 46. | 2 |
| 07. | 2 | 17. | 2 | 27. | 1 | 37. | 2 | 47. | 1 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 3 | 38. | 4 | 48. | 3 |
| 09. | 4 | 19. | 2 | 29. | 1 | 39. | 3 | 49. | 4 |
| 10. | 2 | 20. | 5 | 30. | 3 | 40. | 4 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** திருக்கோயிற் பண்பாட்டினை வளம்படுத்துவதில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

(அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம் (5 புள்ளிகள்)

(ஆ) ஆலயக் கிரியைகளின் சிறப்பம்சம் (7 புள்ளிகள்)

(இ) நுண்கலைகள் (8 புள்ளிகள்)

**2.** பல்லவர் காலத்தில் தமிழகத்தில் இந்து நாகரிகம் சிறப்புப் பெற்றிருந்தமையை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(அ) மன்னர்களது பங்கும் பணியும் (6 புள்ளிகள்)

(ஆ) பக்தி இயக்கமும் அதன் செல்வாக்கும் (7 புள்ளிகள்)

(இ) கலை வளர்ச்சியின் சிறப்பம்சங்கள் (7 புள்ளிகள்)

**3.** இலங்கையில் இந்து சமயத்தை வளம் பெறச் செய்வதில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்புகளை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விவரிக்குக.

(அ) சுவாமி விபுலானந்தர் பற்றிய அறிமுகம் (6 புள்ளிகள்)

(ஆ) சமயப்பணி (6 புள்ளிகள்)

(இ) கல்விப் பணியும் கலைப் பணியும் (8 புள்ளிகள்)

Department of Examinations

## பகுதி II

**4.** "இந்து நாகரிகம் செல்வாக்குச் செலுத்திய நாடுகளின் வரிசையில் தென்கிழக்காசிய நாடுகள் தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையில் விளக்குக.

(அ) இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்கள் (5 புள்ளிகள்)
(ஆ) சமய வளர்ச்சி (5 புள்ளிகள்)
(இ) கலை வளர்ச்சி (5 புள்ளிகள்)
(ஈ) இலக்கிய வளர்ச்சி (5 புள்ளிகள்)

**5.** இராமானுஜரது விசிஷ்டாத்வைத தத்துவத்தின் வளர்ச்சியை மேல்வரும் தலைப்புகளைக் கருத்திற் கொண்டு விளக்குக.

(அ) இராமானுஜர் ஏற்றுக்கொண்ட பிரமாணங்கள் (6 புள்ளிகள்)
(ஆ) பரம்பொருள் பற்றிய கருத்துக்கள் (7 புள்ளிகள்)
(இ) ஆன்மா பற்றிய கொள்கையும் ஆன்ம விடுதலைக்கான வழிகளும் (7 புள்ளிகள்)

**6.** சைவசித்தாந்தம் கூறும் ஆன்மக் கோட்பாட்டினையும் ஆன்மா பக்குவப்படுவதற்குரிய வழிமுறைகளையும் மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையில் விவரிக்குக.

(அ) ஆன்மாவின் இயல்பு (6 புள்ளிகள்)
(ஆ) ஆன்மாவும் மும்மலங்களும் (7 புள்ளிகள்)
(இ) ஆன்மா பக்குவப்படுவதற்குரிய வழிமுறைகளும் வீடுபேறும் (7 புள்ளிகள்)

**7.** "மனிதன் ஆன்மீக வாழ்வில் உய்வு பெறுவதற்கு தர்மமே அடிப்படையாக விளங்கி வந்துள்ளது." இக்கூற்றினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) காரைக்காலம்மையார்
(ஆ) உபநிடத மகாவாக்கியங்கள்
(இ) தட்சிணாமூர்த்தி வடிவம்
(ஈ) முன்னேச்சரம்
(உ) பண்டைய இந்துக்களின் கல்விமுறை
(ஊ) இந்து வானியல் கோட்பாடுகள்

(5 × 4 = 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations

## பகுதி I

**01. திருக்கோயிற் பண்பாட்டினை வளம்படுத்துவதில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.**

**அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்**

**ஆ) ஆலயக் கிரியைகளின் சிறப்பம்சம்**

**இ) நுண்கலைகள்**

**அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்**

* ஆகமம் என்ற பெயருக்கு பொதுவான விளக்கங்களும் சிறப்பான விளக்கங்களும் கூறப்படுகின்றன

* ஆகமம் உணர்த்தும் பல்வேறு பொருள்கள் தோற்றம், வருகை, சாத்திரம் சாத்திரஞானம் ஆப்த வாக்கியம் என்பன குறிப்பிடத்தக்கன.

* இப்பெயர் சுட்டும் சிறப்புப் பொருளைக் குறிப்பிடுமிடத்து தொன்று தொட்டு வரும் அறிவு என்ற பொருளின் அடிப்படையில் அதற்குக் கருவியாகிய சமய நூல்களைக் குறிக்கும். ஆ + க +ம என்ற மூன்றெழுத்துக்களும் முறையே ஆ என்பது பாசமெனவும் க என்பது பசுவெனவும் ம என்பது பதியெனவும் சைவசித்தாந்த அடிப்படையில் பொருள் கொள்ளப்படுகின்றது.

* ஆகமம் என்ற பெயர் சைவ சித்தாந்தம் சிறப்பிக்கும் முப்பொருள்களையும் குறிப்பதாகின்றது. ஆ என்பது சிவஞானம் எனவும் க என்பது மோட்சம் எனவும் ம என்பது மலநாசம் எனவும் பொருள் கொள்ளப்பட்டு ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ்செய்து சிவஞானத்தை உதிர்ப்பித்து மோட்சத்தைக் கொடுப்பதாகும் என்ற சிறப்பான பொருள் விளக்கமும் உண்டு.

* இவற்றுக்கு உறுதுணையாக அமைவன ஆகமம் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களுமாகும். திருமூலர் ஆகமங்களை இறைவன் நூல் எனவும் நாதனுரை எனவும் போற்றுகின்றார். சைவசமயஞ் சார்ந்த ஆகமங்கள் சிவாகமங்கள் என்ற பெயரைப் பெறுகின்றன.

  "அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்" என்பது திருமூலர் வாக்கு.

**( 05 புள்ளிகள்)**

Department of Examinations

### ஆ) ஆலயக் கிரியைகளின் சிறப்பம்சம்

- ✲ ஆகமம் கொண்டு விளங்கும் நான்கு பாதங்களில் கிரியாபாதம் ஆலயக் கிரியைகள் பற்றிக் கூறுகின்றன. கிரியைகளை நடைமுறைப்படுத்துவதில் ஆகமஞ் சார்ந்த பத்ததிகள் பெரிதும் உதவுகின்றன.

- ✲ கிரியைகள் மந்திரபூர்வமாக நிகழ்த்தப்படுவதால் அவற்றைச் செய்பவனுக்கும் செய்விப்பவனுக்கும் மாத்திரமன்றி அவன் சார்ந்த சுற்றம், சமூகம், மற்றும் நாடு உலகம் அனைத்தும் நன்மையடைகின்றன. ஆலயக்கிரியைகளின் நிறைவில் சிவாச்சாரியார் கூறும் ஆசியில்
அனைத்து மக்களும் நலமுடன் வாழ்வார்களாக!
அனைத்து உலகத்தாரும் சுகத்துடன் வாழ்வார்களாக!
அனைத்து மங்கலங்களும் கிட்டுவதாக! என்பன குறிப்பிடத்தக்கன.

- ✲ பக்தி நெறியை வளப்படுத்துவதில் கிரியா பாதத்தில் சிறப்பித்துக் கூறப்படும் கிரியைகள் மூலாதாரமாக அமைகின்றன. வழிபடுவோனையும் இறைவனையும் இணைக்கும் அரிய சாதனமே பக்தி. ஆகமம் சார்ந்த ஆலயங்கள் இப்பக்தி நெறியின் நிலைக்களமாக விளங்கி வருகின்றன.

- ✲ ஆகமம் கூறும் ஆலயக்கிரியைகள் பல்வேறு நிலைகளில் நிகழ்த்தப்படுகின்றன.கிரியாபாதம் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நான்கு பிரிவுகளில் கூறுகின்றது.

- ✲ ஆகமக் கிரியைகளில் பிரதிஷ்டை என்ற கிரியை மகாகும்பாபிஷேகத்தைக் குறிக்கும். இதன் மூலம் திருக்கோயில் இறைவனது தெய்வீக சாந்நித்தியம் நிறைந்து விளங்குவது சிறப்பம்சமாகும். இதனை நடாத்துவது கோயிலில் இடம்பெறும் நித்திய நைமித்திய கிரியைகளில் பூசை வழிபடுவோரிடையே பக்தியையும் வழிபாட்டையும் ஏற்படுத்துவதில் சிறப்பிடம் பெறுகின்றது. இறைவனுக்குரிய உபசாரங்கள் பூசையின் போது வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

- ✲ பூசையின் அங்கமாக அபிஷேகம், அலங்காரம்,நைவேத்தியம், தீபாராதனை, அருச்சனை, தோத்திரங்கூறி வாழ்த்துதல், கீதம் வாத்தியம் போன்றவை ஆலயக்கிரியைகளில் இடம்பெறும் பூசையின் சிறப்பம்சங்கள்.

- ✲ மகோற்சவம் நித்தியத்தில் இடம்பெறும் பல்வேறுபட்ட குறைகளை நிவர்த்தி செய்து திருக்கோயிலில் இறைவனது தெய்வீக சாந்நித்தியம் நிறைந்து காணப்படுவது சிறப்பம்சமாகும்.

- ✲ உற்சவம் இறைவனது ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்தி நிற்பது சிறப்பம்சமாகும். உற்சவம் அனைத்து உயிரினங்களுக்கும் கிடைக்கும் சாம்பவி தீட்சையாகும். கொடியேற்றத்துடன் தொடர்புடைய கிரியைகள் சிருஷ்டியாகிய படைத்தலைக் குறிக்கின்றது.

Department of Examinations

✲ தேர்த்திருவிழா இறைவனது சம்காரமாகிய அழித்தல் தொழிலைக் குறிக்கும். ஆன்மாக்களது ஆணவ மலத்தை ஒடுக்கி இறைவன் அருள்புரியும் தத்துவத்தை தேர்த்திருவிழா கொண்டு விளங்குவது சிறப்பம்சமாகும்.இரதோற்சவத்தில் “ஊர் கூடி தேர் இழுத்தல்” என்ற அரிய சிவப்பணியில் அடியவர்கள் ஈடுபடுவது அக்கிரியையின் சிறப்பம்சமாகும்.

✲ தீர்த்தத் திருவிழாவில் அடியார்களுக்கு இறைவனது திருவருட்பேறு சித்திக்கும்.

✲ மகோற்சவ காலத்தில் இறைவன் பிம்பம், தம்பம், கும்பம் ஆகியவற்றில் எழுந்தருளி அருள்பாலிப்பான். ஆன்மாக்கள் உய்வதற்காகவே இறைவன் ஐந்தொழில்களை மேற்கொள்வதால் அவை தொடர்பான கிரியைகள் திருக்கோயில்களில் சிறப்பிடம் பெறுகின்றன.

**( 07 புள்ளிகள் )**

**இ) நுண்கலைகள்**

Department of Examinations

✲ சிவாகமங்கள் திருக்கோயில்களில் நுண்கலைகள் வளம்பெற உதவி வருகின்றன. திருக்கோயில்களில் இடம்பெறும் நுண்கலைகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்படையவை.

✲ நுண்கலைகள் சமய வாழ்வை வளம்படுத்துவனவாயும் திருக்கோயிற் பண்பாட்டையும் பக்தி நெறியையும் பேணுவனவாயும் அமைகின்றன. இறை நம்பிக்கையையும் ஆத்மீக உண்மைகளையும் உணர்த்தும் ஊடகங்களாக நுண்கலைகள் விளங்குகின்றன.

✲ திருக்கோயிற் கலைகள், தத்துவம், ஆக்கத்திறன், அழகியல், ஆன்மீக வளர்ச்சி, அழகியல் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

✲ சிவாகமங்கள் கூறும் நுண்கலைகள் மூலம் பெறப்படும் அனுபவத்தில் பக்தி, தூய்மை, மனஒருமைப்பாடு என்பன சமயச்சாதனைகளாக சிறப்புப்பெறுகின்றன. ஆன்மீக இலட்சியத்தைப் பெற அவை உதவுகின்றன.

✲ மனித உள்ளத்தைத் தன்வயமாக்கி இறைவன் சிந்தனையில் செலுத்துவதே சிவாகமங்கள் கூறும் நுண்கலைகளின் சிறப்பியல்பாகும்.

✲ கலை அனுபவம் சமய அனுபவம் இரண்டும் ஒரே அனுபவத்தின் வெளிப்பாடு என்பது சிவாகமம் கூறும் நுண்கலைகளுக்கு நன்கு பொருந்தும்.

✲ சிவாகமங்கள் நுண்கலைகள் பற்றிய ஒழுங்கு விதிகளை கூறுகின்றன. கட்டடக்கலை, சிற்பக்கலை, விக்கிரகக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, அலங்காரக்கலை ஆகிய நுண்கலைகள் சிவாகம மரபில் அமையும் திருக்கோயில்களில் சிறப்புப் பெறுகின்றன.

✲ சிவாகமம் கூறும் நுண்கலை சார்ந்த ஒழுங்கு விதிகள், வாஸ்து சாத்திரம், சிற்ப சாத்திரம், நாட்டிய சாத்திரம், இசைக்கலை சார்ந்த சாத்திர நூல்கள் எழுச்சி பெற உதவியுள்ளமை சிறப்பம்சமாகும்.

✳ சிவாகம மரபில் அமைந்த திருக்கோயில்களில் திருவுருவ வழிபாடு சிறப்புப்பெற விக்கிரகக் கலை சாத்திர ரீதியில் வளம் பெற்றது. எடுத்துக்காட்டாக இறைவனது திருவுருவங்களில் சிவலிங்கம், நடராஜவடிவம் போன்றவை சமய உணர்வுக்கும் கலை உணர்வுக்கும் நிலைக்களனாக அமைந்தன.

✳ சிவாகமம் கூறும் விக்கிரகங்களுக்கும் சிற்பங்களுக்கும் தெய்வீக விளக்கந்தரும் நூல்களாக புராணங்கள் அமைந்து நுண்கலைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன.

✳ தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற பல்லவ, சோழர், விஜயநகர நாயக்க மன்னரது காலங்களில் சிவாகம மரபு சார்ந்த நுண்கலைகள் வளர்ச்சியடைந்தன. சிறப்பாக சோழப் பெருமன்னர் காலத்தில் இசைக்கலை, நடனக் கலை என்பன இறைவழிபாடு பக்தி என்பவற்றுடன் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்தன.கல்லிலும் உலோகத்திலும் உன்னதமான இறை வடிவங்கள் உருவாகி நுண்கலை வளம் பெற்றது. இவை தொடர்பான கலைஞர் மரபு உருவாக வாய்ப்பு ஏற்பட்டது.

✳ திருக்கோயில்களில் கோபுரம், விமானம் ஆகியவற்றில் உன்னதமான சிற்பங்களும் ஆலய பிரகாரங்களில் ஓவியங்களும் உருவாகி நுண்கலை வளர்ச்சிக்குச சிறப்புச் சேர்த்தன.

✳ மக்களிடையே திருக்கோயில்களில் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற இறை நம்பிக்கை ஏற்படலாயிற்று.

✳ தேவாரப் பதிகங்கள் ஊடாக திருக்கோயில்களில் பண்ணும் இசையும் இறை உபாசனையாக மலர்ச்சியடைந்தன.

✳ சிவாகமங்களில் விரித்துக் கூறப்படும் நுண்கலைகள் மூலம் திருக்கோயில் வழிபாட்டை உள்ளங்கமாகக் கொண்ட திருக்கோயிற் பண்பாடு வளர்ச்சி பெற்று வருகின்றமை சிறப்பம்சமாகும்.

**( 08 புள்ளிகள் )**

**மொத்தம் 05 + 07 + 08 = 20 புள்ளிகள்**

Department of Examinations

**2) பல்லவர் காலத்தில் தமிழகத்தில் இந்துநாகரிகம் சிறப்புப் பெற்றிருந்தமையை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் விளக்குக.**

**அ) மன்னர்களது பங்கும் பணியும்**

**ஆ) பக்தி இயக்கமும் அதன் செல்வாக்கும்**

**இ) கலை வளர்ச்சியின் சிறப்பம்சங்கள்**

**அ) மன்னர்களது பங்கும் பணியும்**

✳ கி.பி 575 தொடக்கம் கி.பி850 வரையிலான காலம் தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக்காலமாகும். இந்துநாகரிகம் சிறப்புப்பெற இவர்கள் அரிய பங்காற்றினர்.

✳ பல்லவ மன்னர்கள் சைவ நெறியை தமது அரச நெறியுடன் இணைத்து சைவ சமய வளர்ச்சிக்கு உதவினர். சைவ சமய கலாசார மரபை வளர்த்தனர். கி.பி 6ஆம் நூற்றாண்டிலேயே சிம்ம விஸ்ணு

குமார, விஸ்ணு முதலான பல்லவ அரசர்கள் ஆட்சி செய்தனர்.சிம்ம விஸ்ணு வைஸ்ணவ சமயத்தவனாவான். இவனது மகனே மகேந்திரவர்மன்.

✲ பல்லவர் காலத்து பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவன் சிம்மவிஸ்ணுவே. ஆயினும் மகேந்திரவர்மன் காலத்திலேயே இந்துமத மறுமலர்ச்சியும் சமய நிலையில் திருப்பங்களும், புதுமைகளும் ஏற்பட்டன.

✲ பல்லவர் ஆட்சியில் வேதாகம மரபுகள் வளர்ச்சியுற்றன. பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தினர். திருக்கோயில்கள் எழுச்சி பெற்றன. திருக்கோயில் நகரங்கள் உருவாகின. அரண்மனையில் சமயச் சடங்குகள் மேலோங்கின. மன்னர்களும் வேதாகம மரபுகளைப் பேண மக்களும் அவற்றைப் பின்பற்றினர். வடமொழிக் கல்வி பரவி வேள்விக் கிராமங்கள் உருவாகின. மகேந்திரவர்மன் சமணத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறி சைவ சமயத்தைப் பாதுகாத்தான். இவன் பல இடங்களில் குடபோக ஆலயங்களை அமைத்தான். விசித்திரசித்தன், வியத்தகு திறத்தோன், சித்திரகாரப்புலி, குணபரன் போன்ற விருதுப்பெயர்கள் இவன் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு மேற்கொண்ட பங்கும் பணிக்கும் சிறந்த சான்று.

✲ மகேந்திரவர்மன் ஒரு நூலாசிரியன். கட்டட நிர்மாண சிற்பி. குடுமியா மலைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சிவதோத்திரம் மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்திக்குச் சான்று. 1ஆம் சிம்மவர்மன் திருக்கழுக்குன்ற சிவன்கோயிலுக்கு தானம் செய்ததாக சாசனச் சான்று குறிப்பிடுகின்றது. 3ஆம் சிம்மவர்மன் 24 சிவத்தலங்கள் பற்றி சேத்திரவெண்பா பாடியவர்.

✲ மாமல்லன் ரதக்கோயில்கள் அமைத்தவன். திறந்தவெளிப் பாறைகளில் சிற்பவரிசை அமைத்தான். வாதாபியை வெற்றி கொண்டதை அடுத்து வாதாபி கணபதியை தமிழ்நாட்டிற்கு வெற்றியின் சின்னமாகக் கொண்டு வந்தவன்.

✲ பரமேஸ்வரவர்மன் கூரம் என்ற இடத்தில் சிவன் கோயில் அமைத்து கோயிற்பூசைக்கென 108 சதுர்வேதிகட்கு நிலமளித்ததாக அறியமுடிகின்றது. மாமல்லபுர கணேசர் கோயிற் கல்வெட்டு பரமேஸ்வரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியை எடுத்துக்காட்டுகின்றது.

✲ 2ஆம் நரசிம்மவர்மன் பணிகள் 40 ஆண்டு ஆட்சியில் சிறப்புற்றன. காஞ்சிக்கடிகையை மறுசீரமைத்து வடமொழிப்பண்பாட்டைப் பரப்பினான். இவன் அமைத்த பெரிய திருக்கற்றளி காஞ்சிக் கைலாசநாதர் கோயில். தமிழகத்தின் முதலாவது கட்டுமானக் கோயில் என்ற சிறப்புக்குரியது. சைவ, வைணவ அரசர்கள் ஆலயப்பணியில் ஈடுபட்டனர். புராண இதிகாசக் கதைகளின் செல்வாக்கு ஏற்பட்டது.

**( 06 புள்ளிகள் )**

Department of Examinations

## ஆ) பக்தி இயக்கமும் அதன் செல்வாக்கும்

- ✲ பல்லவர்கால பக்தி இயக்கமானது சைவ, வைணவ சமயங்களை கொண்ட பக்தி இயக்கமாக வளம்பெற்றது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றினர்.

- ✲ நாயன்மார்கள் தத்தமது சமயப் பணிகளால் பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரிய பங்களிப்பு நல்கினர். சைவ சமயத்தின் பல்வேறு விடயங்களை பதிகங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

- ✲ பல்லவர்கால சைவம் சார்ந்த பக்தி இயக்கத்தில் சம்பந்தர், அப்பர் ஆகியோரது பணிகள் குறிப்பிடத்தக்கவை. சைவசமயத்தில் அனைத்து மக்களையும் தம்பால் ஈர்ப்பதற்கேற்ற வகையில் நாயன்மார்கள் மேற்கொண்டனர்.

- ✲ இறைவழிபாட்டில் ஈடுபடும்போது பல்வேறு உறவுமுறைகளைக் கடைப்பிடித்தனர். இவர்களின் அரிய பணிகளால் பக்தி இயக்கத்தில் ஆலய வழிபாடும் ஆலய சேவைகளும் சைவ சாதனைக-ளாகப் பரிணமித்தன. தமது திருப்பதிகங்களை பண்ணுடன் பாடி பக்தி இயக்கத்திற்குப் பெருமை சேர்த்தனர். சைவ நாயன்மார்கள் அற்புதச் செயல்கள் மூலம் இறை உண்மையை நிரூபித்தனர்.

- ✲ மக்களுடன் இவர்கள் ஏற்படுத்திய தொடர்பு பக்தி இயக்கம் வளம்பெற உதவியது.

- ✲ சைவ சின்னங்களின் பெருமை, சிவனது பரத்துவம், சைவ சித்தாந்த தத்துவப் பொருள் ஆகியவற்றைத் தம் பதிகங்கள் மூலம் எளிமையாக வெளிப்படுத்தினர். அப்பர் மகேந்திரவர்மனின் சைவசமய மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தார்.

- ✲ இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தவும் மக்களுக்குச் சமயக் கருத்துக்களைக் கூறவும் ஆலய வழிபாட்டில் ஈடுபடுத்தவும் இசையுடன் கூடிய பாடல் பெரிதும் உதவின. இதன்மூலம் பக்தி இயக்கம் செல்வாக்குப் பெற்றது. சமூக சமத்துவம் முக்கியத்துவம் பெற்றது. ஆலய வழிபாட்டோடு சைவ நாற்பாதங்களின் மகிமை பற்றியும் எடுத்துக்கூறி பக்தி இயக்கத்திற்கு உரமூட்டினர்.

- ✲ நாயன்மார்களைப் போன்று ஆழ்வார்களும் வைணவ நெறி சார்ந்த பக்தி இயக்கம் தமிழகத்தில் தழைத்தோங்குவதற்கு பெரிதும் பணியாற்றினர். பாமர மக்களிடத்தில் பக்தியுணர்வையூட்டி பக்தி இயக்கத்தை மக்கட் சார்புடையதாக அமைய வழிவகுத்தனர்.

- ✲ ஆழ்வார்களின் இசைப்பாடல்கள், ஆலய வழிபாடு சார்ந்த தலயாத்திரை, அற்புதங்கள் போன்ற செயற்பாடுகள் பக்தி இயக்கத்தின் பொதுமக்கட் தொடர்பைக் காட்டுவன. ஆழ்வார்களது பாடல்கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களாகப் பரிணமித்தன.

- ✲ பக்தி இயக்கத்திற்கு வளம் சேர்ப்பதற்கு ஆழ்வார்கள் இதிகாச புராணக் கதைகளைக் கையாண்டு பாசுரங்கள் பாடினர்.

Department of Examinations

✲ இறைவனின் பெருமை பஞ்ச சம்ஸ்காரங்களின் சிறப்பு, நால்வகை யோகங்களின் சிறப்பு முதலானவை, பக்தி முதலானவை பக்தி இயக்கங்களிற்கு உரமூட்டின. விஷ்ணுவின் அவதாரச் சிறப்பு பாடல்களில் முக்கியத்துவம் பெற்றது.

✲ இவ்வகையில் பக்தி இயக்கம் செல்வாக்குப் பெற்றுச் சிறப்படைய நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் பங்கும் பணியும் அடித்தளமாக அமைந்தமை குறிப்பிடற்பாலது.

**( 07 புள்ளிகள் )**

**இ) கலை வளர்ச்சியின் சிறப்பம்சங்கள்**

✲ பல்லவர்கால மன்னர்களின் ஆதரவில் எழுச்சி பெற்ற குடைவரை, ரதக்கோயில்கள், கற்றளிகள் போன்றபல்வகைஆலயங்கள்அக்காலகலைவளர்ச்சிக்குச்சிறப்புச்சேர்த்தன.பல்லவர்காலத்தில் சிற்பசாஸ்திர விதிகளுக்கமைவான சிற்பங்கள் அமைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

✲ பல்லவர்காலச் சிற்பங்களை கட்டடக்கலையின் அடிப்படையில் குடைவரைத் தனிச் சிற்பங்கள், செதுக்குத் தளிச்சிற்பங்கள் கட்டுத்தளிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர்.

✲ பல்லவ மன்னர்கள் நுண்கலை வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்தமைக்கு அவர்கள் பெற்றுள்ள விருதுப் பெயர்கள் சான்று. மகேந்திரவர்மன் பெற்றுள்ள விசித்திரசித்தன் என்ற விருதினால் அவனது கலை ஈடுபாடு புலனாகின்றது.

✲ பல்லவர்கள் பலரும் மாமல்லபுரமேயல்லாமல் பிறஊர்களிலும் சிற்பச் சிறப்புடன் கோயில்கள் அமைத்துள்ளனர்.

✲ மண்டகப்பட்டில் மும்மூர்த்திகளுக்கும் அமைத்த குடைவரை குறிப்பிடத்தக்கது. திருச்சி மலைக்கோயில் உட்பகுதி கங்காதரர் குறிப்பிடற்பாலது.

✲ தருமராச ரதத்தில் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. சோமஸ்கந்தரின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

✲ மகிடாசுர மண்டபத்தில் மகிடாசுரமர்த்தினியின் சிற்பம் சிறப்புடையது.

✲ இராசசிம்மனால் கட்டப்பட்ட கற்றளியாகிய கைலாசநாதர் கோயில் கலை வண்ணமாக விளங்குகின்றது. சிவன், உமை, முருகன், திருமால் முதலிய தெய்வீகத் திருவுருவச் சிற்பங்கள் உள்ளன.

✲ காஞ்சி வைகுண்டப்பெருமாள் கோயில் உட்புறத்திருச்சுற்றில் உள்ள சுவர்களில் உள்ள சிற்பங்கள் பல்லவர்களது வரலாற்று நிகழ்ச்சிகளோடு தொடர்புடையன.

✲ மாமல்லபுரத்து பாறைச் சிற்பங்கள் அரிய கலைக்கருவூலங்கள் ஆகும். வானத்திலிருந்து கங்கையை பூமிக்குக் கொண்டுவர பகீரதன் ஒற்றைக்காலில் நின்று தவமிருப்பது சிறந்த சிற்பப் படைப்பு. திருமாலின் குடைவரைக்கோயிலில் திருமாலின் அனந்தசயன சிற்பமும் சிறப்புடையது. கிருட்டிணன் கோவர்த்தன மலையை குடையாகப் பிடிக்கும் காட்சி, யானை சிங்கம் நிற்கும் காட்சி மாமல்லபுர சிற்பக்கலைக்கு சிறப்புச் சேர்க்கின்றது. இவ்வாறாக பல்லவர்கால நுண்கலைச்

Department of Examinations

சிறப்பினை அக்கால சிற்பங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

✳ நாயன்மாரது திருப்பதிகங்கள் பண்ணிசைக்கு மூலமாக அமைந்தன. ஆழ்வார்களது திருப்பாசுரங்கள் இசையின் சிறப்பிற்குச் சான்று. குடுமியாமலை இசைக்கல்வெட்டு அக்கால இசைக்குச்சான்று. ராஜசிம்மனது விருதுப் பெயர்கள் இசையில் அவன் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டுவன.

✳ நடனக் கலைக்கு மன்னர்கள் ஆதரவளித்தனர். இக்காலத்தில் நடனமாதர்கள் இசை நடனக்ககலைகளில் தேர்ச்சிபெற்றிருந்தனர். இவர்கள் நாயன்மார்கள் இயற்றிய தேவாரங்களுக்கு ஆடினர் என்பதை சம்பந்தர், அப்பர் பாடல்கள் மூலம் அறியலாம்.

✳ ஆடலையும் பாடலையும் குறிப்பிட்டவாறு ஆடுவதற்கும் இசைப்பதற்கும் இக்கலையில் தேர்ச்சி பெற்ற நடனமாதர்கள் நியமிக்கப்பட்டனர். உருத்திர கணிகையர் சிவாலயங்களில் கலைப்பணி செய்து வந்தனர்.

✳ நடனமாதர்களை தேவாரங்கள் நன்நடனமாதர், தேனார் மொழியார் எனச் சிறப்பித்துள்ளமை நுண்கலைக்குச் சிறப்புச் சேர்க்கிறது.இவ்வாறு பல்லவர் காலத்தில் நடனமாதர், கோயிலோடு இணைக்கப்பட்டு அக்கலையின் வளர்ச்சிக்கு பணியாற்றினர்.

✳ நடனச் சிற்பங்களும் அக்காலத்தில் எழுச்சி பெற்றுள்ளன. சித்தன்ன வாசலிலுள்ள புகழ்பெற்ற ஓவியங்கள் பல்லவர் காலத்தவை. நடன ஓவியங்களும் உள்ளன. நாட்டிய சாஸ்திர மரபை ஒட்டியவை.

✳ இவ்வாறாக பல்லவர் காலத்தில் எழுச்சி பெற்ற நுண்கலைகள் அக்காலத்துத் திருக்கோயில்களோடு இணைந்தவையாக வளம்பெற்று அவை இந்துநாகரிகத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுவது குறிப்பிடற்பாலது.

**( 07புள்ளிகள் )**

**மொத்தம் 06 + 07 + 07 = 20 புள்ளிகள்**

Department of Examinations

**3. இலங்கையில் இந்துசமயத்தை வளம்பெறச் செய்வதில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்புக்களை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.**

**அ) சுவாமி விபுலானந்தர் பற்றிய அறிமுகம்**

**ஆ) சமயப்பணி**

**இ) கல்விப் பணியும் கலைப்பணியும்**

**அ) சுவாமி விபுலானந்தர் பற்றிய அறிமுகம்**

✳ கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பிற்குத் தெற்கேயுள்ள காரைதீவில் 1892ஆம் ஆண்டு பிறந்தவர் சுவாமி விபுலானந்தர். இளமையில் தமது கல்வியை தக்கவர்களிடம் பயின்று ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றவர்.

✳ ஆறுமுகநாவலரிடத்து விபுலானந்த அடிகள் கொண்டிருந்த மதிப்பின் காரணமாக அவரைப்

பின்பற்றி சைவ சமயத்திற்கு அரும்பெரும் தொண்டாற்றியவர்.

✳ பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து கொழும்பு ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி பெற்றவர். 1916 இல் மதுரை தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். 1920இல் இலண்டன் விஞ்ஞானப் பட்டதாரி. 1922 இல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஸ்ண மடத்துச் சுவாமி சிவானந்தரால் பிரபோத சைதன்யர் என்னும் பிரம்மசரிய நாமம் சூட்டப்பட்டவர்.

✳ 1924இல் ஞான உபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சாநாமம் பெற்றவர்.

✳ அவரது துறவு வாழ்வு இந்துசமயத்தை வளம்பெறச் செய்யவும் மானிட நேயத்தை வளர்க்கவும் உதவியது. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் கிரேக்கம் ஆகிய மொழிகளில் வல்லுநர். இராமகிருஸ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுக நாவலர் ஆகிய சமயப் பெரியோர்களை மதித்துப் போற்றி அவர்களது பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு இந்துசமய வளர்ச்சிக்கு அரும்தொண்டாற்றியவர்.

✳ சமயப்பணி, கல்விப்பணி, கலைப்பணி, நூலாசிரியர்பணி, உரையாசிரியர்பணி, பதிப்பாசிரியர்பணி, சமூகப்பணி என பலதுறைகளில் பணியாற்றி சமய தத்துவ கருத்துக்களை சாதாரண மக்களும் பயனடையும் வகையில் எளிய நடையில் விளக்கி அரிய தொண்டாற்றியவர்.

**( 06புள்ளிகள் )**

**ஆ) சமயப்பணி**

✳ இலங்கையிலும் இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கியவர். மகாலட்சுமி தோத்திரம், நடராஜவடிவம், உமாமகேஸ்வரம், கணேச தோத்திர பஞ்சகம் கதிரையம்பதி மாணிக்க விநாயகர் இரட்டை மணிமாலை முதலிய சமய நூல்களை ஆக்கி மக்களிடையே சமய அறிவு விரிவடைய உதவியவர்.

✳ சமயப்பிரசங்கம், சமயச் சொற்பொழிவு

✳ இலங்கையில் அத்வைத வேதாந்த மரபு பரவ உதவியவர்.

✳ சமயம் அனுட்டிப்பதற்குரியது என்பதை தமது போதனை ஆராதனை மூலம் நிலைநாட்டியவர்.

✳ பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி வளம்பெற பல பணிகள் செய்தவர்.

✳ வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தல், பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல், வார இறுதியில் சமய வகுப்பு பண்ணிசைப் பயிற்சி சமயக்கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவகையில் போதித்து சமய அறிவை வளர்த்தவர்.

**( 06 புள்ளிகள் )**

Department of Examinations

## இ) கல்விப் பணியும் கலைப்பணியும்

✲ சுவாமி விபுலானந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அவ்வகையில் கல்வி பெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்.

✲ தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கும் பொருட்டு சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதை வலியுறுத்தி சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபாரிசு செய்தார்.

✲ அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உதயமாக வித்திட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

✲ மேல்நாட்டுக் கல்வியை இந்துக் கல்வி மரபுக்கமைவாகப் போதிக்க வழிவகை செய்தார். கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது அது உயிர்ப்பூட்டுவது உண்மையைக் காட்டுவது தன்னம்பிக்கை தருவது என்ற கல்விக் கொள்கையுடையவராக சுவாமி விபுலானந்தர் விளங்கினார்.

✲ இராமகிருஸ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை உருவாக்கியவர். 1925இல் இலங்கையில் இராமகிருஸ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைத்துவத்தை பொறுப்பேற்றுக் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.

✲ கல்லடி சிவானந்தா ஆண்கள் பாடசாலை,ஆனைப்பந்தி இராமகிருஸ்ணமிஷன் பெண்கள் பாடசாலை, காரைதீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றை நிறுவி ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒளியூட்டினார்.

✲ அநாதை ஆசிரமம் நிறுவி வசதி குறைந்த சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தியவர். பல்வேறு கல்விச் சபைகளில் பணியாற்றியவர்.

✲ சமயஞ்சார் கல்விப் பணியே இவரது பணிகளில் முக்கிய இடத்தைப் பெற்றது.

✲ கலைப்பணி - இயலின்றி இசையில்லை, இசையின்றி இயலில்லை என்ற கொள்கையில் இசைத்தமிழில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஆய்விலும் ஈடுபட்டார்.

✲ காலத்திற்கேற்ப கவிதை புனைந்தவர்.

✲ குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம் என்பவற்றை எழுதியவர். பல்வேறு பாவகைகளைக் கையாண்டவர்.

✲ நாடகநூல் – மதங்க சூளாமணி

Department of Examinations

✲ இசைநூல் – யாழ் நூல்

✲ முத்தமிழிலும் சுவாமி விபுலானந்தர் வல்லவர். "முத்தமிழ் வித்தகர்" என சுவாமி விபுலானந்தர் போற்றப்பட்டார். இவற்றோடு சமூகப் பணியிலும் ஈடுபட்ட பெருமைக்குரியவர்.

**( 8 புள்ளிகள் )**

**மொத்தம் 06 + 06 + 08 = 20 புள்ளிகள்**

## பகுதி II

**4. 'இந்து நாகரிகம் செல்வாக்குச் செலுத்திய நாடுகளின் வரிசையில் தென்கிழக்காசிய நாடுகள் தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றன'. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையில் விளக்குக.**

**அ) இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்கள்**

**ஆ) சமய வளர்ச்சி**

**இ) கலை வளர்ச்சி**

**ஈ) இலக்கிய வளர்ச்சி**

Department of Examinations

**அ) இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்கள்**

✲ தென்கிழக்காசியா என்ற சொற்றொடரானது ஆசியாவின் தெற்கேயுள்ள நாடுகளையும் தீபகற்பங்களையும் குறிக்கும். அவற்றில் தாய்லாந்து, மியான்மார், கம்போடியா, மலேசியா, சம்பா என்பவை நாடுகளாகவும், இந்தோனேசியா (யாவா, சுமாத்திரா, போர்ணியோ) பாலித்தீவு என்பவை தீவுகளாகவும் விளங்குகின்றன.

✲ வணிகம், அரசியல் ஆகிய தொடர்புகளால் இந்துநாகரிகம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவியது.

✲ விவாகத் தொடர்புகளும் அரச உறவுகளும் ஏற்படலாயின. அரச சபைகளில் பிராமணர்கள் முதன்மை பெற்றனர்.

✲ இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாகவே அத்தகைய குடியேற்றங்கள் ஏற்பட்டன. அந்நாடுகள் சுவர்ணபூமியாக விளங்கியதால் வர்த்தக நடவடிக்கைகள் பெருகின.

✲ இந்திய மக்கள் தென்கிழக்காசிய மக்களுடன் வாழ்வியல் அடிப்படையில் கலந்து கொண்டனர். அரசர்கள், வணிகர்கள் இந்தியாவிலிருந்து குடியேறியமையால் பிராமணர் நெறி, கலையம்சங்கள், இந்து இலக்கிய மரபுகள், சமயம், வாழ்க்கை அம்சங்கள், அரசியல் முறைமைகள்அனைத்தும் பரவின. இவையாவற்றையும் உள்ளடக்கியதாக இந்துநாகரிகம் இந்நாடுகளில் செல்வாக்குப்பெறலாயின.

**( 05 புள்ளிகள் )**

### ஆ) சமய வளர்ச்சி

✲ கோயில்கள் சிறப்பாக இந்நாடுகளில் எழுந்தன.
கம்போடியா - அங்கோர்வாட் சிவாலயம்
சம்பா - பத்திவர்மன் பத்திரேஸ்வரர் கோயில்
யாவா - பிரம்பனான் கோயில்
தாய்லாந்து - வாட்போங் கோயில்
மலேசியா - பத்துமலை முருகன் கோயில்

✲ ஆலயங்களில் திருவெம்பாவைப் பாடல் இடம்பெற்றது.

✲ பத்துமலை முருகன் ஆலயத்தில் தைப்பூசம் மிகவும் சிறப்பு,

✲ இந்து சமயச் சடங்குகள், பட்டாரகுரு வழிபாடு, திருமுறை ஓதுதல், பஞ்சாங்கம் பார்த்தல், புனிதநீராட்டு விழா, இந்துசமய முறைப்படி அரசசபைகளில் பட்டாபிஷேக விழா, பிராமணர்களுக்குத் தானம், கார்த்திகை, பௌர்ணமி விழாக்கள், ஜாவாவில் பூர்ணவர்மன் ஆயிரம் அந்தணர்களுக்குத் தானம் வழங்கினார்.

✲ பல்லவ சோழ அரசவம்சங்கள், சயாம் நாட்டின் தலைநகரில் இந்துக்குடியிருப்பு.

**(05 புள்ளிகள்)**

### இ) கலை வளர்ச்சி

✲ பௌத்த கோயில்களில் இராமாயணச் சிற்பங்கள், இராமாயணக் கதைசார்ந்த ஆடல்மரபு, கூத்துக்கள், செங்கல், கருங்கல் கொண்டு கட்டடம் கட்டும் பழக்கம்.

✲ இந்தியாவிலிருந்து ஆந்திரபிரதேச கலைமுறை, கலிங்க கலைமுறை, பல்லவ கலை மரபு என்பன பின்பற்றப்பட்டன.

✲ இத்தகைய அம்சங்கள், இந்திய செல்வாக்கையும் இந்துநாகரிகத்தின் சிறப்பையும் காட்டிநிற்கின்றன.

**(05 புள்ளிகள்)**

### ஈ) இலக்கிய வளர்ச்சி

✲ அரச சபைகளில் அர்த்த சாஸ்திரம், தர்மசாஸ்திரம் என்பவற்றின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. மகாபாரதக்கதை, அருச்சுன விவாகம், பாரத யுத்தம் எனும் பெயர்களில் பரவியது. இராமாயணக்கதை, இராமர் கதை என்று தாய்லாந்தில் புகழப்படுகின்றது. சமஸ்கிருத மொழி தென்கிழக்காசிய மொழிகளுடன் சங்கமமாகியமைக்கு இவை எடுத்துக்காட்டு.

Department of Examinations

✲ இந்து அரசமுறை தழுவிய அர்த்தசாஸ்திரம், கலை நூலாகிய நாட்டிய சாஸ்திரம், பக்தி இலக்கியமாகிய திருவெம்பாவை போன்றவை தென்கிழக்காசிய நாடுகளில் செல்வாக்கடைந்தன. அரசசபைகளில் பகவத்கீதை உபதேசங்கள் ஆலோசனையாக வழங்கப்பட்டன.

✲ யாவா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பல வடமொழிச் சாசனங்கள் இலக்கிய மரபைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. முடிசூட்டு விழாக்களில் திருமுறைகள் ஓதும் வழக்கம் காணப்பட்டது.

**( 05 புள்ளிகள் )**

**மொத்தம் 05 +05 + 05 + 05 = 20 புள்ளிகள்**

**5. இராமானுஜரது விசிட்டாத்வைத தத்துவத்தின் வளர்ச்சியை மேல்வரும் தலைப்புகளைக் கருத்திற் கொண்டு விளக்குக.**

**அ) இராமானுஜர் ஏற்றுக்கொண்ட பிரமாணங்கள்**

**ஆ) பரம்பொருள் பற்றிய கருத்துக்கள்**

**இ) ஆன்மா பற்றிய கொள்கையும் ஆன்ம விடுதலைக்கான வழிகளும்**

**அ) இராமானுஜர் ஏற்றுக்கொண்ட பிரமாணங்கள்**

✲ காட்சி, அனுமானம், ஆப்தவாக்கியம் ஆகியவற்றை ஏற்றார்.

✲ இராமானுஜர் தமது தத்துவக் கோட்பாட்டின் உருவாக்கத்திற்கு ஏற்ற நூல்கள் பிரஸ்தானத் திரயம் ஆகும்.

✲ உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை, நாலாயிரத் திவ்விய பிரபந்தம் விசிட்டாத்வைத முறைமைக்கு அடிப்படையாக அமைந்தது. எனவே உபயவேதாந்தம் என்ற பெயரும் இத்தத்துவ முறைக்கு ஏற்படலாயிற்று.

✲ பிரமசூத்திரத்துக்கு இவர் எழுதிய உரை ஸ்ரீபாஷ்யம் ஆகும்.

✲ பகவத்கீதைக்கு இவர் எழுதிய உரை விசிட்டாத்வைத விளக்கத்திற்கு மூலமாகும்.

✲ பாகவத மரபும் இவரது கோட்பாட்டிற்கு ஊற்றாக அமைகிறது. உபநிடதக்கருத்துக்களை முதன்மைப்படுத்திய கோட்பாடு விசிட்டாத்வைதக் கோட்பாடாகும். வைணவ புராணங்களும் இவரது கோட்பாட்டிற்கு உதவியுள்ளன.

**(06 புள்ளிகள்)**

Department of Examinations

### ஆ) பரம்பொருள் பற்றிய கருத்துக்கள்

✲ பிரம்மம், ஆன்மா, உலகு ஆகிய முப்பொருள்களும் உண்மை என்ற அடிப்படையில் அமைந்ததே விசிட்டாத்வைதக் கோட்பாடு.

✲ உயிர்கள் அனைத்தையும் உள்நின்று இயக்குபவன் இறைவன் - பரமான்மா. உலக இயக்கத்துக்கும் இறைவனே காரணமாகின்றான். இதனால் இப்பொருட்கள் அனைத்தும் ஒன்று. இதுவே இராமானுஜரது அத்வைதம். ஆன்மாக்கள் பலவாயினும் அவை அனைத்தையும் தனது உடலாகக் கொண்டு ஆன்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாய் நிற்கும் பரமான்மா ஒன்றுதான். இறைவனுக்கும் உயிருக்குமுள்ள இந்த சரீரசரீரி சம்பந்தம் இராமானுஜரது கொள்கையில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

✲ உலகு, உயிர்கள் ஆகியவற்றுற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைப் பிரிக்க முடியாதது என்ற பொருளில் அப்பிரதசித்தி என்ற சொற்றொடரை இராமானுஜர் வழங்கியுள்ளார்.

✲ இவரது தத்துவத்தில் உலகும் உண்டு. உயிர்களும் உண்டு. ஆனால் அவை பிரமத்துக்கு விசேடணங்கள். பிரமம் அவ்விசேடணங்களையுடைய விசேடியம். இந்த விசேடணம்,விசேடியம் ஆகிய இரண்டும் சேர்ந்த விசிட்டமே இராமானுஜர் பேசும் பரம்பொருள். இதனால் அவரது தத்துவக்கோட்பாடு விசிட்டாத்வைதம் எனப் பெயர்பெற்றது. பிரமம் என்ற மூலப்பொருள் விஷ்ணு, ஸ்ரீமந்நாராயண மூர்த்தியே கடவுள், உலகத்தோற்றத்துக்குத் தலைவன். ஆன்மாக்களை எல்லாம் உடலாகக் கொண்டு விளங்கும் பரமான்மா.

✲ இறைவனாகிய பிரமத்தின் பண்புகள் பற்றியும் கூறுகின்றார், இறைவன் பூரண அறிவுடையவர். ஐஸ்வர்யம், பலம், வீரியம், தேஜஸ், ஞானம் ஆகியவை அவனது பண்புகள்.

✲ சிருஷ்டி, திதி, சம்காரம், ஞானம், எனும் நான்கு தொழில்களை இயற்ற வாசுதேவன், பிரத்யும்னன், அநிருத்தன் எனும் நிலைகளை எடுக்கிறான்.

✲ இறைவனின் சக்தி ஸ்ரீ. ஸ்ரீயினின்றும் பிரிக்க முடியாதவன் ஸ்ரீநிவாசன். ஆன்மாக்களை கருணைகொண்டு காப்பவன்.

**(07 புள்ளிகள்)**

### இ) ஆன்மா பற்றிய கொள்கையும் ஆன்ம விடுதலைக்கான வழிகளும்

✲ ஆன்மா எண்ணிக்கையில் பல. அவை நித்தியமானவை. அழிவற்றவை.

✲ தாம் செய்யும் கன்ம வினைகளுக்கேற்ப உடல்களை எடுக்கின்றன.

✲ மூவகை ஆன்மாக்கள்,
அ) எப்பொழுதும் முத்திநிலையில் உள்ளவை
ஆ) கட்டுண்ட நிலையிலிருந்து முத்தியடைந்தவை
இ) எப்பொழுதும் கட்டுண்ட நிலையில் உள்ளவை

Department of Examinations

✲ ஆன்மாக்களுக்குரிய முக்கிய குணம் ஞானமுடைமை. இந்த ஞானத்தை இராமானுஜர் 'தர்மபூத ஞானம்' என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிடுகின்றார். இவ்வறிவு நிறைவற்றது. அந்தக்கரணங்களின் துணையுடனேயே அறியும் இயல்புடையது.

✲ இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு என்பன அறிவின் இயல்புகள். ஆன்மாக்களின் துயருக்கும் இன்னலுக்கும் காரணம் அறிவுக்குறைவு. ஆன்மாக்களின் கன்ம பலன்களின் அடிப்படையில் வீடுபேறு கிடைக்கும். பகவானது பேரருளால் ஆன்மாக்களின் கன்மம் அழிந்து முத்திநிலை ஏற்படும்.

✲ பிறவித்துன்பங்களிலிருந்து நீங்கி ஸ்ரீமந் நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீவைகுண்டத்தை அடைவதே ஆன்ம விடுதலையாகிய வீடுபேறாகும். இதற்கு கன்மமார்க்கம், பக்திமார்க்கம், ஞானமார்க்கம் ஆகிய மூன்றும் ஆன்மாக்களுக்குத் துணைசெய்யும் என்பது இராமானுஜரது கொள்கை.

✲ இவற்றுடன் பிரபக்தியையும் இராமானுஜர் கூறுகின்றார். இறைவன் மீது பூரண நம்பிக்கை வைத்து தன்னை முழுமையாக அவனிடம் ஒப்படைத்தலே பிரபக்தியாகும். மனிதனும் முயலவேண்டும். அதே சமயம் இறைவனும் அருளவேண்டும் என்ற பிரபக்தி நெறியை ஆன்மவிடுதலைக்குரிய வழியாக இராமானுஜர் சிறப்பித்துக் கூறுகின்றார். தியானம், உபாசனை ஆகியவையும் வீடுபேற்றிற்கு வழிவகுப்பவை.

(07 புள்ளிகள்)

**மொத்தம் 06 + 07 + 07 = 20 புள்ளிகள்**

Department of Examinations

**6. சைவசித்தாந்தம் கூறும் ஆன்மக் கோட்பாட்டினையும் ஆன்மா பக்குவப்படுவதற்குரிய வழிமுறைகளையும் மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையில் விவரிக்குக.**

**அ) ஆன்மாவின் இயல்பு**

**ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்**

**இ) ஆன்மா பக்குவப்படுதவற்குரிய வழிமுறைகளும் வீடுபேறும்.**

**அ) ஆன்மாவின் இயல்பு**

✲ சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் ஒன்றெனச்சிறப்புப் பெறும் ஆன்மா பசு எனக் குறிப்பிடப்படுகிறது.

✲ கடவுளைப் போலவே ஆன்மாவும் அநாதி. நித்தியப் பொருள். எண்ணிக்கை கடந்த பன்மையானவை.

✲ பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டது. மும்மலங்களால் கட்டுண்டவை. ஆன்மாவுக்குப் பல குணங்கள் உள்ளன.

✲ அவை அறிவித்தால் அறியும் தன்மை, சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மை என்பனவாகும்.

✲ சிற்றறிவு, சுதந்திரமற்றது. கன்மவினைகளை அனுபவிக்கும். பல பிறவிகளைப் பெறும்.

✲ சைவசித்தாந்திகள் ஆன்மாவை வேறுபல பெயர் கொண்டு குறிப்பிடுவர். ஜீவன், உள்ளம், சதசத்து எனப்பலவாறு கூறுவர்.

**( 06புள்ளிகள் )**

**ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்**

✲ ஆன்மாவுக்கு மூவகை அவத்தைகள் உள்ளன.
1. கேவலாவத்தை: உயிர் ஆணவ மலத்தோடு இணைந்து அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் நிலை – இருள்நிலை.

2. சகலாவத்தை : உயிர்மீது கொண்ட கருணையினால் இறைவன் மாயையை முதற்காரணமாகக் கொண்டு உயிருக்கு தனு, கரண, புவன போகங்களை தந்தருளுகின்றான். உடம்பை ஏற்கும் உயிர் மலபந்தங்களுக்கு உட்பட்டு நிற்கும் நிலை – மருள்நிலை.

3. சுத்தாவத்தை : சகலாவத்தையில் பல்வேறு பிறவிகள் எடுத்துப் படிப்படியே முதிர்ந்து இறைவன் திருவருளுக்கு உரியதாகும் நிலை – அருள்நிலை.

✲ பசுக்களாகிய ஆன்மா பெத்தநிலையில் மூவகைப்படும்.
விஞ்ஞானகலர் : ஆணவம் மட்டும் உள்ளவர்.
பிரளயாகலர் : ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களை உடையவர்.
சகலர் : ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை உடையவர்.

✲ ஆன்மாக்கள் ஆணவ முனைப்பால் நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளைப் புரிந்து அவற்றின் பலனை அனுபவிப்பதற்கு ஏற்ப உடம்பைப் பெறுகின்றன. பிறந்து பழவினைகளை நுகரும் போதே புதுவினைகளையும் பெருக்கி பிறப்பிறப்புச் சூழலில் உழல்கின்றன.

✲ மலங்கள் மூவகைப்படும். ஆணவம்,கன்மம், மாயை என்பன. ஆன்மா இறைவனை உணர்ந்து பேரின்பம் அடைவதற்குத் தடையாக அதனைப் பந்தித்திருப்பது பாசமாகும். இது தளை, கட்டு, பந்தம் எனவும் வழங்கப்படும்.

✲ பாசம் உயிரை மாசுபடுத்தும் காரணத்தால் மலம் எனப்படும். மும்மலங்களும் ஆன்மாவைப் பற்றும் சடத்தன்மையுள்ள அறிவற்ற நித்தியப்பொருள்கள். மும்மலங்களுள் ஆணவமே ஆன்மாவை அநாதியாய் பற்றியுள்ளதால் மூலமலம் எனவும், சகசமலம் எனவும் கூறுவர்.

✲ கன்மமும் மாயையும் இடையிடையே வந்து செயற்கையாகக் கூடுவன. ஆகையால் அவை ஆகந்துகமலம் எனப்படுகின்றன.

✲ ஆணவம் உயிரின் குணமன்று குற்றமே. சிற்றறிவும் சிறுசெயலும் உடையதாக்குதல் ஆணவத்தின் இயல்பு. நான் எனது என எண்ணும் அகந்தையும் இது எனது என எண்ணுகின்ற மமதையும் ஆணவத்தினாலேயே ஆன்மாக்களுக்கு உண்டாகின்றன.

Department of Examinations

✲ ஆணவம் செம்பிற் களிம்பு போன்று உயிருடன் கலந்து நிற்கும். ஆணவம் ஆன்மாவைப் பந்திக்கும் போது தன்னையும் காட்டாது, பிறபொருளையும் காட்டாது. இதனால் இது இருள்மலம் எனப்படும்.

( 07புள்ளிகள் )

இ) ஆன்மா பக்குவப்படுவதற்குரிய வழிமுறைகளும் வீடுபேறும்

✲ ஆன்மா பிறப்பை ஒழித்து முத்திபெற மலங்களிலிருந்து விடுபடவேண்டும்.

✲ ஆன்மா மலபந்தங்களிலிருந்து விடுபடுவதற்கு சைவசித்தாந்தம் பலவழிகளைக் கூறுகின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களாகும். இந்நான்கு மார்க்கங்களிலும் நிற்கும் ஆன்மா படிமுறையாக முத்தி நிலையை நோக்கிச் செல்லும். இதன் முதற்படியாக அமைவது தீட்சையாகும்.

✲ மனிதப்பிறவி எடுத்த ஆன்மா மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தை 'இறைபணி நிற்றல் என்பர்' அகப்பூசை, புறப்பூசை, மந்திரசெபம், திருக்கோயில் வழிபாடு, அடியார் வழிபாடு, சமூகத்தொண்டு ஆகியன இதனுள் அடங்கும். சைவசித்தாந்தம் இதனை குரு, லிங்க, சங்கம வழிபாடு எனச் சிறப்பிக்கின்றது.

✲ இவ்வாறு செயற்படும் போது ஆன்மாவானது மலங்களிலிருந்து விடுபட்டு பக்குவ நிலையை அடையும். இதனை இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனும் படிநிலைகளாகச் சைவசித்தாந்தம் கூறும். இந்நிலையில் இறைவன் குருவடிவமாக வந்து ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்ப அவற்றை ஆட்கொண்டருளுவர்.

✲ இவ்வாறு மலங்கள் ஒழிந்து திருவருட்சக்தியினால் ஞானம் பெற்ற நிலையில் ஆன்மாவானது பிறவிச்சுழற்சியில் இருந்து நீங்கி முத்திநிலையாகிய வீடுபேற்றை அடையும்.ஆன்மா இறைவன் திருவடியை அடைந்து இரண்டறக் கலந்து பேரின்பம் பெறுதலே முத்திநிலை என சைவசித்தாந்தம் கூறும்.

✲ இந்நிலையைத் தாடலை போல் கூடல் எனத் திருவருட்பயன் கூறும்.

( 07புள்ளிகள் )

மொத்தம் 06 + 07 + 07 = 20 புள்ளிகள்

Department of Examinations

**7. 'மனிதன் ஆன்மிக வாழ்வில் உய்வு பெறுவதற்கு தர்மமே அடிப்படையாக விளங்கி வந்துள்ளது' இக்கூற்றினை ஆராய்க.**

- இந்து தர்மத்துக்கு வேதங்களே மூலம். உயிர்கள் இறைவனை அடைவதற்கான சாதனங்களுள் தர்மமே முக்கியத்துவமுடையது. இது உலகத்தைத் தாங்குவது. உலகத்தையும் மக்களையும் பாதுகாப்பது, நிலைநிறுத்துவது என்னும் பொருள்களைத்தரும்.

- இந்து தர்மங்களை தர்மசாஸ்திரங்கள் விபரமாகக் கூறுகின்றன.
  தர்மம் – அறம் எனவும் பொருள்படும். அறம் எனப்படுவது விதித்தன செய்தலும் விலக்கின ஒழித்தலும் என மனுதர்மசாஸ்திரம் முதலிய நூல்கள் கூறும்.
  இந்து சமயம் சனாதனதர்மம் எனச்சிறப்பிக்கப்படுகிறது. இதன் முதல் நூலாகிய வேதங்கள் 'வேதோகிலோ தர்ம மூலம்' என்று கூறுவது சிறப்பம்சமாகும்.

- வேதங்களிலும் உபநிடதங்களிலும் சுருக்கமாகக் கூறப்பட்ட தர்மங்கள் இதிகாச புராணங்களில் விரிவுபெறுகின்றன. அவை தர்மசாஸ்திரங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கூறப்பட்டுள்ளன.
  இவை தனிமனித தர்மமாகவும், குடும்ப தர்மமாகவும், அரசதர்மமாகவும், சமூகதர்மமாகவும், விரித்துக் கூறப்பட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன.

- மனுஸ்மிருதி, தர்மம் பற்றிய விதிகள் தெய்வீகமானவை என்றும், அவை முனிவர்களுக்கு இறைவனால் உபதேசிக்கப்பட்டவை என்றும் கூறுகின்றது.

- தர்மசாஸ்திரங்களில் அடங்கும் ஆசார காண்டம், சுவதர்மம், சமூக தர்மங்கள் பற்றிக் கூறும்.

- நால்வகை ஆச்சிரம தர்மங்கள் – பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் முதலியவை பற்றியும், நால்வகை வர்ணத்தவரும் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறைகள் பற்றியும் கூறுவன. பிரம்மச்சரிய ஒழுக்கம் போன்ற ஆச்சிரமங்கள். ஜபம் செய்யும் முறை, திருமணம் செய்யும் முறை, பெற்றோரைப் பேணுதல், புனித தலயாத்திரை, இல்லற தர்மங்கள், விரதங்கள், அவற்றின் பயன்கள் பற்றிய விடயங்கள் ஆன்மிக வாழ்வுக்கு உதவுவன. இத்தகைய சுவதர்மங்களைப் பேணுவதனால் இந்து தர்மம் சிறப்புப் பெறுவதோடு தனிமனித சமூகவாழ்வும் மேன்மையடைகின்றது.

- நால்வகை ஆச்சிரமங்களைக் கடைப்பிடிக்கும் முறையில் ஆற்றவேண்டிய கடமைகள் பினபற்ற வேண்டிய ஒழுக்க நியமங்கள் என்பன பற்றிக் கூறி மக்களது ஆன்மிக வாழ்வு சிறக்கவும் தர்மசாஸ்திரங்கள் உதவிவந்துள்ளன.

- பிரம்மச்சரிய நிலையில் மாணவன், கல்வி ஒழுக்கம், கடவுள் வழிபாடு, பெரியோரைப் பேணுதல், விருந்தோம்பல் ஆகிய தர்மங்களைக் கற்கும் வாய்ப்பினைப் பெறுகின்றான். கிருகஸ்த நிலையில் அறத்தோடு கூடிய இல்லற வாழ்வு சிறப்படைகிறது. ஐவகை வேள்விகள் முதலிய கடமைகளும் கூறப்படுகின்றன. வானப்பிரஸ்த நிலையிலும் புலனடக்கம் பெற்று சந்நியாச நிலையில் ஆன்மிகப் பயிற்சி பெற்ற ஒருவன் முற்றும் துறந்த நிலை வீடுபேற்றுக்காக முயற்சிக்கும் நிலை யாகும். இந்நிலையே மனிதவாழ்வின் இலட்சியமாகும் என தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன.

Department of Examinations

✲ ஆச்சிரமதர்மங்களூடாக புருடார்த்தங்களை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு தர்மசாஸ்திரங்கள் வழிகாட்டுகின்றன. பகவத்கீதையும் இந்துதர்மம் பற்றியும், ஆன்மிக வாழ்வு பற்றியும் சிறப்பாகக் கூறுகின்றது. இராஜதர்மம் பற்றியும் தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. மனுதர்மத்தைக் கடைப்பிடிப்பது இராஜதர்மம் என்ற சிந்தனை இந்து அரசர்களிடையே காணப்பட்டது. தர்மத்தை நிலைநாட்டுவதும் குடிகளைப் பாதுகாத்தலும் அரசனது தர்மமாகும். திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய தமிழ்நீதி நூல்களிலும் அறம் பற்றிய சிந்தனைகள் உள்ளன. இவ்வகையில் மனித வாழ்வு ஆன்மிக வாழ்வில் மேன்மையடைய தர்மங்களே வழிகாட்டி நிற்கின்றன.

**(20 புள்ளிகள்)**

**8. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

**அ) காரைக்காலம்மையார்**

**ஆ) உபநிடத மகாவாக்கியங்கள்**

**இ) தட்சிணாமூர்த்தி வடிவம்**

**ஈ) முன்னேச்சரம்**

**உ) பண்டைய இந்துக்களின் கல்விமுறை**

**ஊ) இந்து வானியல் கோட்பாடுகள்**

Department of Examinations

**அ) காரைக்காலம்மையார்**

✲ இயற்பெயர் புனிதவதியார். சைவசமயத்தின் மேன்மைக்குப் பணியாற்றியவர். வணிககுலத்தில் பிறந்தவர். சிவனை ஆழ்ந்த பக்தியோடு போற்றிவழிபட்டவர்.

✲ இறைவன் திருவடியை மறவாதிருக்க வேண்டியவர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் இவர் ஒரு பெண்ணடியவர்.

✲ உலக வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து வினைப்பயனை நீக்கி ஆன்மிகப் பயனை அடைந்தவர்.

✲ இவரது நூல்கள் - திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் போன்றவை. இவரது பாடல்கள் பதினொராம் திருமுறையில் அடங்கியுள்ளன.

✲ இவரது படிமங்கள் ஆலயங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம் போன்ற இலக்கியங்கள் இவரைப்பற்றி நயம்பட உரைக்கின்றன.

**(05 புள்ளிகள்)**

## ஆ) உபநிடத மகாவாக்கியங்கள்

- ✳ வேதத்தின் அந்தமாக விளங்குபவை உபநிடதங்கள். பிரஸ்தான திரயத்தில் ஒன்று.

- ✳ உபநிடதம் அறியாமையை நீக்கி ஞானத்தை நல்குவது என ஆதிசங்கரர் விளக்கம் தருகின்றார். உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் கொண்டனவே உபநிடதங்கள். பிரம்ம, ஆன்ம விசாரணைக்கு உதவக்கூடிய மகாவாக்கியங்கள் உபநிடதங்களில் உள்ளன.
  தத்துவம் அஸி – நீ தான் அது
  அகம் பிரம்மாஸ்மி – நான் பிரம்மம்
  சோ (அ) கம் அஸ்மி – நானே அவன்

- ✳ "ஸர்வம் கலு இதம் பிரமம்" – அனைத்தும் பிரம்மமே ஆகிய மகாவாக்கியங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றை மூலமாகக் கொண்டு இந்து தத்துவ சிந்தனையாளராகிய சங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்றோர் தத்தமது கோட்பாடுகளை உருவாக்கினர்.

- ✳ வேதாந்த தத்துவ மரபு இவற்றின் மூலம் வளம்பெற்றது. பிரம்மம், ஆன்மா, உலகம் பற்றிய உண்மைகளை அறியவும், உணரவும் இவை உதவுகின்றன.

- ✳ பகவத்கீதை உபநிடத மகாவாக்கியங்களில் ஒன்றாகிய தத்துவமஸி என்பதன் விளக்கமாக உள்ளமை சிறப்பம்சமாகும்.

**(05 புள்ளிகள்)**

Department of Examinations

## இ) தட்சிணாமூர்த்தி வடிவம்

- ✳ சிவனது வடிவங்களின் வரிசையில் தட்சிணாமூர்த்தி வடிவம் சிறப்புடையது. இவ்வடிவம் சிவாலயத்தின் கருவறையோடு இணைந்ததாக தென்புறம் நோக்கியதாக அமையும்.

- ✳ இறைவன் குருவடிவாக விளங்கும் நிலை.

- ✳ தோற்ற அமைப்பு – கல்லால மரத்தின் கீழ் குருமூர்த்தமாக வலது கால் கீழே தொங்கும் நிலையிலும் இடது காலை மடித்தும் விளங்கும். வீராசனம். வலது கரம் சின்முத்திரை, இடது பக்க முன்கரம் வரதம். பின்பக்க வலது கரம் அக்சமாலையையும், இடது கரம் அக்கினி அல்லது சர்ப்பத்தைத் தாங்கியும் விளங்கும்.

- ✳ அவரது உடம்பு நேராக அமையும். தலையில் சடை பல கோலங்களில் அமையும். கீழே தொங்கும் கால் அபஸ்மார புருஷனை மிதித்தவாறு அமையும். மூன்று கண்கள், இது வியாக்கியான தட்சணாமூர்த்தியின் அம்சம். ஞான தட்சிணாமூர்த்தி எனவும் கூறுவர்.

- ✳ இவ்வடிவம் காட்டி நிற்கும் சின்முத்திரை உயர்ந்த தத்துவ ஞானத்தை உணர்த்தும். முப்பொருள் உண்மை, ஞான உபதேசம், சனகாதி முனிவர்கள் சூழ இருப்பர். வீணாதட்சிணாமூர்த்தி, யோகதட்சிணாமூர்த்தி வடிவங்களும் ஆலயங்களில் சிற்பங்களாக உள்ளன.

**(05புள்ளிகள்)**

## ஈ) முன்னேச்சரம்

- இலங்கையில் உள்ள சிவாலயங்களின் வரிசையில் முன்னேச்சரமும் சிறப்புப் பெறுகின்றது. வரலாற்றுச் சிறப்புடையது. இலங்கையின் வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் என்ற நகரிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் கிழக்காக குருநாகல் வீதியில் இச்சிவாலயம் அமைந்துள்ளது.

- இறைவன் முன்னை நாதர் என்ற திருநாமம் கொண்டவர். அம்பிகை ஸ்ரீ வடிவாம்பிகை. கருவறையில் இலிங்கத்துடன் ஸ்ரீவடிவாம்பிகை எழுந்தருளியிருப்பது சிறப்பம்சமாகும். அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றென விளங்குகின்றது. இராமபிரான் இங்கு எழுந்தருளியுள்ள சிவனைப் பூசித்ததாக தட்சிணகைலாய மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது.

- அரசமரம் தலவிருட்சம். தீர்த்தம் – மாயவன் ஆறு. (தெதுறு ஓயா) இங்கு வருடந்தோறும் நவராத்திரி விழா வெகுசிறப்பாக நடைபெறும். வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி, ஆண்டில் இரு மகோற்சவங்கள், மாசி மகத்தன்று தீர்த்த உற்சவம் இடம்பெறக் கூடியதாக முன்னுள்ள ஒன்பது நாட்களில் ஒரு மகோற்சவம். ஆவணிமாதம் பூரணையன்று தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியதாக முன்னுள்ள இருபத்தேழு நாட்கள் ஒரு மகோற்சவம் இடம்பெறும். அறுபத்து மூன்று நாயன்மார் திருவுருவங்களுள்ளன.

- அண்மையில் மூன்று இராஜகோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் தெய்வீகச்சிறப்பைக் கூறும் பிரபந்தங்களும் வரலாற்று நூல்களும் எழுந்துள்மை சிறப்பம்சமாகும்.

- எத்தகைய வேறுபாடுகளுமின்றி அனைத்து மதமக்களும் வழிபடும் ஆலயம் முன்னேச்சரம்.

**(05 புள்ளிகள்)**

## உ) பண்டைய இந்துக்களின் கல்விமுறை

- வேதம், உபநிடதம் கூறும் கல்வி மரபு – செவிவழிக்கல்வி, வேத அத்தியயனம்.

- குருகுலக்கல்வி – ரிஷிகளின் ஆச்சிரமங்கள். ஆத்மிகம் சார்ந்த கல்வி, ஒழுக்கம் முக்கியத்துவம், பல்வேறு தர்மங்கள் போதிக்கப்பட்டன. உபநிடதம் குருவுக்கு அருகே இருந்து கல்வி உபதேசம் பெறுதல். தகுதி உள்ளவர்களுக்கே கல்வி போதிக்கப்பட்டது. அரண்மனைக்கல்வி – வில்வித்தை, சோதிடம், இலக்கணம்,

- புராதனக் கல்விக் கூடங்கள் – தக்ஷசீலம், உஜ்ஜயனி, காஞ்சி கடிகைஸ்தானம், நாலந்தா, காசி, பாடலிபுரம் குறிப்பிடத்தக்கன. திருக்கோயில்களிலும் அதன் சுற்றாடலிலும் நடைபெற்ற கல்விப்போதனை, சதுர்வேதி மங்கலம், வக்காணிப்பு மண்டபம்.

Department of Examinations

- ஆதீனக்கல்வி மரபு - சைவசித்தாந்தம் போதிக்கப்பட்டது. குருவின் வீட்டிலிருந்து மாணவன் ஆன்மிகப் பயிற்சி பெற்றான். தைத்திரிய உபநிடதம் குருகுலக் கல்வியின் பயன் கூறும். இதிகாசங்களில் வில்வித்தை, சோதிடம், மருத்துவம் சார்ந்த கல்வி, ஆகமக்கல்வி - குருசீட முறையிலும் குருகுலங்கள் மூலமும் இடம்பெற்றன.

- திருக்குறள் கல்வியின் பயன் கூறும்.
  'கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
  நற்றாள் தொழார் எனின்' கற்றபடி ஒழுகுதல் பற்றியும் திருக்குறள் வலியுறுத்துகிறது.

- மாணவர் குருவுக்குத் தட்சிணை வழங்குவது முக்கிய அம்சம்.

**(05 புள்ளிகள்)**

**ஊ) இந்து வானியல் கோட்பாடுகள்**

- வேதங்களில் பிரபஞ்சம் பற்றியும் பிரபஞ்ச ஒழுங்கு பற்றியும் குறிப்புகள் உள்ளன. புராணங்களில் வான சாஸ்திரம் பற்றிய கருத்துக்கள் உள்ளன.

- வானியல், பிரபஞ்சவியல் ஆகிய துறைகளில் இந்துக்கள் மற்றவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளனர். பண்டைய கிரேக்கரது கோட்பாடுகள் முன்னேற்றமானவை.

- பூமி கோள வடிவமானது, தன்னக சுழற்சிக்கு உட்பட்டது. அதேவேளை ஆதவனையும் வலம் வருகின்றது என்பது போன்ற வானியல் சார்பான உண்மைகளை இந்துக்கள் முதன்மையாகக் கண்டறிந்துள்ளனர்.

- வேதகால மகரிஷி பரத்வாஜர் ஒளியின் வேகத்தைக் கணிப்பிட்டுள்ளார். வராகமிகிரரின் பிருகத்சம்ஹிதை, ஆரியப்பட்டரின் ஆக்கங்கள், புளிசர், பிரமகுப்தர், லாடதேவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.இவர்கள் வானியல் துறையில் அறிவு மிக்கவர்கள். புளிசரால் புளிச சித்தாந்தம் என்ற வானியல் நூல் எழுதப்பட்டது.

- பண்டைய வானியல் கோட்பாடுகளில் (கி.மு. 500 - கி.பி 500)
  அ) பிதாமஹ கோட்பாடு - வருடம் 365 நாட்களைக் கொண்டது.
  ஆ) புளிக்ஷ கோட்பாடு - நீள்வட்டப்பாதை பற்றிய விபரம், நட்சத்திரங்களின் தோற்றம் மறைவு.
  இ சூரியக் கோட்பாடு- கிரகங்களின் அசைவு கணிப்பு, பண்டைய இந்து அறிவியல் மேதைகளின் சாதனைகள், அறிவியற் சிந்தனைகள் இந்து நாகரிகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**(05 புள்ளிகள்)**

**மொத்தம் 05 + 05 +05 +05 = 20 புள்ளிகள்**

Department of Examinations